மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

அ.வ.எண்.205/2015

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமரேசன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் | சிகாமணி | வகுப்பு | |
| வயது | | சமயம் | இந்து |
| நாள் | 19.09.2022 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.4 | | |

இன்று 19.09.2022 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**:-

1) நான் தற்போது நங்கவள்ளி வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வட்டார வளர்ச்சி அலுவலர் எனக்கு அளித்த அனுமதி கடிதத்தின் அடிப்படையில் தற்போது இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவந்துள்ளேன். மேற்படி அனுமதி கடிதம் **வாதி தரப்பு சாட்சியின் 3ம் நபர் சான்றாவணம் Ex.X.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் அசலையும், அதனை ஒப்பிட்டு நோக்கிய சான்று நகலையும் தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். வீட்டுவரி கேட்பு பதிவேட்டின் படி கதவு எண்.7-30 மேட்டூர் வட்டம், சூரப்பள்ளி கிராமத்தில் உள்ள வீடு யார் பெயரில் உள்ளது என்றால் வெங்கட்ராமன் மகன் மாரியப்பன் என்பவரது பெயரில் உள்ளது. மேற்படி வீட்டுவரி கேட்பு பதிவேட்டின் படி 2013ம் ஆண்டு முதல் நாளது தேதி வரை வெங்கட்ராமன் மகன் மாரியப்பன் என்பவரது பெயரில் உள்ளது. மேற்படி வீட்டுவரி கேட்பு பதிவேட்டின் ஒப்பிட்டு சான்று நகல் **வாதி தரப்பு சாட்சியின் 3 ம் நபர் சான்றாவணம் Ex.X.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) மேற்படி வெங்கட்ராமன் மகன் மாரியப்பன் என்பவரது பெயரில் உள்ள 2021 மற்றும் 2022 ம் ஆண்டுகளுக்குரிய வீட்டுவரி ரசீதுகளின் ஒப்பிட்டு சான்று நகல் **வாதி தரப்பு சாட்சியின் 3 ம் நபர் சான்றாவணம் Ex.X.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) மேற்படி வீடானது எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால் ச.எண்.252/5 ல் அமைந்துள்ளது. மேற்படி விவரங்கள் எனக்கு தெரியும்.

**(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.4 குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.